**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**OS.No. 207/2008**
**நாள்.07.10.2025**
**பி.வா.சா.1- ராகுல்பாபா**
**த/பெ - ராஜமோகன்**
**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

10. 2014ம் ஆண்டு தாவா சொத்துக்களை ஒரு அழகர்சாமி நாயுடு என்பவரிடமிருந்து கிரையம் பெற்றோம்.

11. அழகர்சாமி நாயுடுவிற்கு தாவா சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்றால் SRR கம்பெனியிடமிருந்து அழகர்சாமி நாயுடு கிரையம் பெற்றதன் அடிப்படையில் அவருக்கு தாவா சொத்துகள் பாத்தியம்.

12. 1ம் பிரதிவாதியிடமிருந்து பொது அதிகார ஆவணம் பெற்ற பாஸ்கரன், அழகர்சாமி ஆகியோர் எங்களுக்கு நண்பர்கள், தெரிந்தவர்கள், பழக்கமானவர்கள் என்றால் தெரிந்தவர்கள்.

13. தாவா சொத்துகளை எனது கிரையதாரர் மோசடியாக கிரையம் பெற்றும், அவரிடமிருந்து கிரையம் பெற்று வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ததன் அடிப்படையில் வடமதுரை காவல் நிலையத்தில் வாதி சுப்பையா 08.09.2010ம் தேதி 7ம் பிரதிவாதியினுடைய கணவர் ஆர். பாலசுப்பிரமணியன் மீதும், 8ம் பிரதிவாதியாகிய எனது தந்தை ராஜமோகன் மீதும், 11ம் பிரதிவாதியான சங்கரராமானுஜம் மீதும், 12ம் பிரதிவாதியான இறந்துபோன நாகராஜன் மீதும் மற்றும் பலர் மீதும் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.394/2010 U/Sec120(B) மற்றும் 506(2) இ.த.ச வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

14. வாதியின் தந்தை பாலகிருஷ்ணனுக்கு எத்தனை மனைவிகள் என்றால் ஒரு மனைவிதான். அவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் தெரியாது என்று சொல்வது பொய் என்றாலும், வாதியின் தந்தை பாலகிருஷ்ணனுக்கு ஜெயலட்சுமி மற்றும் ரங்கநாயகி என்ற இரண்டு மனைவிகள் உண்டு என்றாலும், அந்த விவரம் தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15. பாலகிருஷ்ணன், ஜெயலட்சுமி மற்றும் ரங்கநாயகி எப்போது இறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

16. திருத்தல்பிராதில் உள்ள 1 முதல் 3 வாதிகள் பாலகிருஷ்ணன் மற்றும் ரங்கநாயகி ஆகியோரின் வாரிசுகள் என்றால் சரியல்ல. வாரிசுகள் என்று தெரிந்தும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17. இறந்துபோன பாலகிருஷ்ணனுக்கு ஒரு மனைவி என்பதற்கும், அவருடைய வாரிசுகள் யார் என்பதற்கும் எங்களது தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

18. 2014ம் ஆண்டு கிரையம் பெற்ற நாளில் இருந்து வாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

19. 2014ம் ஆண்டு கிரையம் பெற்றபின்பு வருவாய்துறை ஆவணங்கள் எனது பெயரில் உள்ளன என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

20. எனது பெயரில் உள்ள பட்டாவிற்கான பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது.

21. தாவா சொத்திற்கான பட்டா எண்.1026 நாளது தேதி வரை மாரியப்பன் மனைவி முத்தம்மாள் பெயரில் தான் இருந்துவருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

22. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை மோசடியாக கிரையம் பெற்று வாதிகளுக்கு வீண் தொந்தரவும் இடைஞ்சலும் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக வீண் எதிர்வாதம் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல.

23. எங்களது கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B | Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**